# 13 விகடன்

**நாடகத்தை செவிமடுப்போம், பாத்திரமேற்று உணர்வுபூர்வமாக வாசிப்போம், பாத்திரமேற்று நடிப்போம்.**



**இடம்** - *அரண்மனை*
**காலம்** - *பகல்*
**பாத்திரங்கள்** - *அரசன், விகடகவி, அமைச்சர், நாட்டியப் பெண்கள், காவலாளிகள்.*

*(அரசன் அரியணையில் அமர்ந்துள்ளான்.)*

**அரசன்** : *நாட்டியம் மிக மிக அருமை சபாஷ்......*

**அமைச்சர்** : *ஆம் அரசே! அற்புதம்.*

**அரசன்** : *நாட்டியக் கலையே புத்துயிர் பெற்றது..... ஆஹா என்ன அற்புதம் என்ன அற்புதம்.*

**அமைச்சர்** : *ஆம் அரசே! ஆம்.*

**அரசன்** : *இந்த நாட்டிய மங்கைகளைப்போல் வேறு எவரும் உள்ளனரோ.*

**அமைச்சர்** : *வேறு எவரும் இருக்கமாட்டார்கள் அரசே!*

**அரசன்** : *இவர்களுக்குத் தக்க பொன்னும், பொருளும் பரிசாய் வழங்க வேண்டும்.*

**அமைச்சர்** : *ஆம் அரசே!*

**அரசன்** : *நாட்டிய மங்கைகளே! வாருங்கள். பரிசுகளைப் பெற்றுச் செல்லுங்கள்.*

**நாட்டியப் பெண்** : *வணக்கம் அரசே! மிக்க நன்றிகள்.*

*(நாட்டியப் பெண்கள் போகிறார்கள் காவலாளி வருகிறான்.)*

**காவலாளி** : *மன்னாதி மன்னா! தங்களைச் சந்திக்க விகடகவி ஒருவர் வந்துள்ளார்.*



**அரசன்** : வரச்சொல் அவனை! அவனை முன்பே வரச் சொல்லி இருந்தேன். அவனின் நகைச் சுவை நயத்தைச் சோதிக்கவே அழைத்தேன். எனவே, இங்கு எது நிகழ்ந்தாலும் அவையோரே சிரிக்காதிருங்கள்.

**அமைச்சர்** : அப்படியே ஆகட்டும் அரசே!

**விகடகவி** : மன்னாதி மன்னரே வணங்குகிறேன். தங்கள் பெயரும், புகழும் காடு, மலை, கடல் நிலம் நீர் காற்று எங்கும் பரவிக் காணப்படுகிறது. தங்களைப் போன்ற மன்னர் இருக்கையில் குறையுண்டோ எமக்கு.

**அரசன்** : போதும், நிறுத்து உன் பேச்சை. உன் விகடம் இங்கே செல்லாது. என் அவையினர் ஒருவரும் நகைக்கமாட்டார்கள். நகையாது இருக்கும்படி உத்தரவிட்டு உள்ளேன். எனவே உனக்குப் பரிசும் அளிக்கப் போவதில்லை.

**விகடகவி** : கேவலம், பரிசு பெறவா நான் இங்கு வந்தேன். தங்கள் புகழைக் கேட்டு நேரில் காணவே வந்தேன்.

**அரசன்** : ஆஹா! அப்படியா?

**விகடகவி** : தாங்கள் செய்த போரும், பெற்ற வெற்றியும் எனக்குத் தெரியும். படையில் தங்களுக்குத் தெரியாமல் நானும் போர் செய்தேன்.

**அரசன்** : இருக்கலாம், இல்லாமலும் இருக்கலாம். நான் எத்தனை பேரை வென்றேன் தெரியுமா?

**விகடகவி** : ஏன் எனக்குத் தெரியாது. நானும் அங்கு தானே இருந்தேன்.

**அரசன்** : எப்படி என் வீரம்!

**விகடகவி** : போர்க்காலத்தில் உங்களைப் பார்த்து வியந்தேன். உங்களைப் பின்பற்றப் பல சாகசமும் புரிந்தேன்.

**அரசன்** : என்ன, அப்படியா?

**விகடகவி** : உண்மைதான் அரசே! எதிரிப் படைத்தலைவனின் கால்களை நானல்லவோ வெட்டினேன்.

**அரசன்** : உண்மையாகவா? எப்படி?

**விகடகவி** : பொய் நம் பிறவியிலேயே இல்லை.

**அரசன்** : சரி தான். அது ஏனப்பா தலையை விட்டுவிட்டுக் கால்களை முதலில் வெட்டினாய்?

**விகடகவி** : தலையைத்தான் எனக்கு முன்னமே யாரோ வெட்டி விட்டனரே.

**அரசன்** : என்ன? முண்டத்தின் கால்களைத் தான் நீ வெட்டினாயா? நீ சூரன்தான். நீ கெட்டிக்காரன் தான், நீ மஹா பெரும் விகடன் தான். அஹ்ஹ்ஹ்ஹ்ஹா...... (அனைவரும் நகைத்தனர்.)

**அரசன்** : ஆ என்னையும் மறந்தல்லவா நகைத்தேன். உண்மையாகவே இவன் திறமையான விகடன் தான். இதோ! பொன்னும் பொருளும் உனக்கு.

## சொல் அறிமுகம்

| | | |
|---|---|---|
| **நாட்டியம்** | - | නර්තනය |
| **அற்புதம்** | - | අරුම පුදුම |
| **புத்துயிர்** | - | නවජීවය |
| **விகடகவி** | - | විකටයා |
| **நகைச்சுவை** | - | හාස්‍යය |
| **விகடம்** | - | විකට/විහිළු |
| **உத்தரவிடு** | - | අණ දෙනු |
| **வியப்பு** | - | පුදුම |
| **சாகசம்** | - | අරුම පුදුම ක්‍රියා |
| **பிறவி** | - | උපන් |
| **முண்டம்** | - | හිස නැති ශරීරය |
| **சூரன்** | - | ශූරයා |
| **கெட்டிக்காரன்** | - | දක්ෂයා/සමතා |

## செயற்பாடு - 01

**பின்வரும் சொற்களுக்கு ஒத்த கருத்துள்ள சொற்களை எழுதுங்கள்.**

1. நகைச்சுவை - ______________________
2. ஐயம் - ______________________
3. மன்னன் - ______________________
4. யுத்தம் - ______________________
5. மெய் - ______________________

## செயற்பாடு - 02

இந்நாடகத்தைக் கதையாகச் சுருக்கி எழுதுங்கள்.

## செயற்பாடு - 03

**பின்வரும் கூற்றுக்களை மொழிபெயர்த்து எழுதுங்கள்.**

1. நாட்டியக் கலை புத்துயிர் பெற்றது.

   ______________________________

2. இந்த நாட்டிய மங்கைகளைப் போல், வேறு எவரும் உள்ளனரோ?

   ______________________________

3. எது நிகழ்ந்தாலும், அவையோரே சிரிக்காதீர்கள்.

   ______________________________

4. உன் விகடம் இங்கே செல்லாது.

   ______________________________

5. தங்களைப் போன்ற மன்னர் இருக்கையில் குறையுண்டோ எமக்கு.

   ______________________________